ஸ்ரீ ஹரி:

# மதுரமுரளி

தனி பிரதி
Rs 15
ஆண்டு சந்தா
Rs 180

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள்
அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிகை

ஏப்ரல்
2020
வேணு 25
கானம் 9




Delivered by India Post www.indiapost.gov.in




HUMBLE PRANAMS AT
THE LOTUS FEET OF GURUJI

**DR SHRIRAAM MAHADEVAN**

Consultant Endocrinologist
Endocrine & Speciality Clinic
Sri Ganesh Flats, Flat No 4, Ground floor,
Old no.72, New No 460,
TTK Road, Alwarpet, Ch – 18
Tel: 044-24350090, Mob: 9445880090
Email: mshriraam@gmail.com,
www.chennaiendocrine.com

# பொருளடக்கம்


5 மதுரமான மஹனீயர்

9 கேள்வி பதில்

10 ஸ்ரீ ஸ்வாமிஜியின் கல்பதரு தின அருளுரை

18 நிகழ்வுகள் மடல்

25 பக்தி ஏணிப் படிகள்

28 பாலகர்களுக்கு ஒரு கதை

29 மாதம் ஒரு ஸம்ஸ்க்ருத வார்த்தை

32 ஸ்ரீ நாம்தேவ் மஹராஜ் சரித்ரம்

35 ஆன்மீக முன்னேற்றத்தின் உண்மையான அறிகுறி


<u>முன் அட்டை:</u>
ஓவியம்: ஸ்ரீ கேஷவ் வெங்கட்ராகவன்

<u>பின் அட்டை:</u>
பாரத பிரதமரின் வேண்டுகோளை தொடர்ந்து, சுயநலமற்ற சேவை செய்பவர்களுக்கு மார்ச் 22ம் தேதி கை தட்டி பாராட்டு தெரிவிக்கப்பட்டது


மதுரமுரளி
வேணு 25; கானம் 9


ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே





# மதுரகீதம்

ராகம்: கேதாரம்　　　　　　　　　　தாளம்: ஆதி

வீர ராகவோ விஜயதே
வைதேஹி ரமணோ விஜயதே || வீ ||

பித்ருவாக்ய பாலன உத்தம புத்ர:
ப்ராஹ்மணசேவன த்ருட வ்ரத :
ப்ரஹ்மாதி சேவித ஸரஸிஜ சரண :
பக்தாகர்ஷண பாவன சாரித்ர: || வீ ||

கனகாபரண பூஷித பட்டாபிராம:
கஜராஜ சேவித கம்பீர ஹ்ருதய:
கனகவல்லீ நாயக: சுந்தரரூப:
கருணா கடாக்ஷம் குருதே சததம் || வீ ||

ஹனுமந்த பூஜித ஆனந்த ரூப:
அஷ்ரிதஜன ரக்ஷண ஸத்ய ஸங்கல்ப:
அனன்யபக்திம் தேஹி தவ சரணே மே
ஆனந்த முரளீதர ப்ரிய தேவ || வீ ||

# மதுரமான மஹானியர்

கொரோனா வைரஸ் அபாயம் நம் நாட்டையும் உலகையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் சமயம் இது. மருத்துவ நிபுணர்களும், மத்திய மாநில அரசாங்கங்களும் தங்களால் இயன்ற அளவு இந்த அபாயத்தை தடுக்க முயன்றுவருகின்றன. நோய் பரவுவதை தடுப்பதற்காக நம் நாட்டிலும் பல உலக நாடுகளிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிகள், கல்லூரிகள், கடைகள் என்று அனைத்தும் மூடப்பட்டுவிட்டன. வீதிகள் வெறிச்சோடி காணப்படுகின்றன. ஒரு விதமான பீதியும் பயமும் எல்லோர் மனங்களிலும் ஏற்பட்டுள்ளது. எந்நாட்டவராயினும், எந்த மொழி பேசுபவராயினும், சிறுவர் முதல் பெரியவர்கள் வரை எல்லோருக்கும் இரண்டே கேள்விகள் தான்.

இந்த வைரஸ் பாதிப்பு எப்பொழுது நிற்கும்?

நாம் இயல்பு வாழ்க்கைக்கு எப்பொழுது திரும்புவோம்?

இதே கேள்வியை நம் சத்சங்கத்தை சேர்ந்த ஒரு குழந்தையும் ஸ்ரீ சுவாமிஜியிடம் கேட்க, அவர் அளித்த பதில் பின்வருமாறு:

‘‘நம் உலக சரித்திரத்தின் பக்கங்களை புரட்டி பார்த்தோமானால் தொன்றுதொட்டு எத்தனையோ சவால்களை மனிதகுலம் சந்தித்தும், வெற்றிகரமாக தாண்டியும் வந்துள்ளது. தெய்வம் என்றும் நம்மை கைவிட்டதில்லை. மனிதன் தனது முயற்சிகளாலும் யுக்திகளாலும், அவ்வப்போது நிகழ்ந்துள்ள பேரிடர்களை சமாளித்து தாண்டி வந்துள்ளான். மனிதனின் முயற்சிகள் வெற்றிபெற தெய்வத்தின் அருள் எப்பொழுதும் துணை நின்றுள்ளதை நாம் ஒவ்வொருமுறையும் நிதர்சனமாக கண்டுள்ளோம். இதுபோன்ற சூழ்நிலைகளில் தெய்வமும், தெய்வத்தின் கரங்களான மஹான்களுமே நமக்கு கதி.

பல நூற்றாண்டுகளுக்கு முன் கோவிந்தபுரம் பகவந்நாம போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் சரித்திரத்தில் இது தொடர்பான ஒரு சம்பவம் நிகழ்ந்தது. Plague தொற்றுநோய் அனைத்து ஜனங்களையும் பாதித்து, நாட்டையே அச்சுறுத்திக்கொண்டிருந்தது. ஆற்காடு நாட்டின் நவாபும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டார். அந்த ஊர் மக்கள் ஸ்வாமிகளை தஞ்சமடைந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டனர். கருணைக் கடலான குருநாதரும் ராம நாம ஜபத்தால் அந்த மக்களை கொடிய நோயிலிருந்து காப்பாற்றினார் என்று அவர் சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆற்காடு நவாப், தனது நன்றியை தெரிவிப்பதற்காக, மடத்திற்கு நிலத்தை அன்பளிப்பாக வழங்கினார் என்பதும் அவர் சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஷீர்டி பாபாவின் சரித்திரத்தில் இதேபோன்ற ஒரு நிகழ்வு உள்ளது. அந்நாளில் அந்த பகுதியையே காலரா நோய் தாக்கி பலர் உயிரிழந்தனர். பச்சிளங்குழந்தைகளும் ஏழை எளியோரும் படும் பாட்டை கண்டு ஷீர்டி பாபா உருகினார். என்றைக்கும் இல்லாமல் அன்று காலை ஒரு மாவு அரைக்கும் இயந்திரத்தையும் சிறிது கோதுமையும் எடுத்துவந்து தானே அரைக்க துவங்கினார். பாபா இவ்வாறு எதற்காக செய்கிறார் என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுந்தது. அவரிடம் கேட்பதற்கும் பயமாக இருந்தது. இதை பார்த்துக்கொண்டிருந்த பெண்மணிகள், ஷீர்டி பாபாவிடம், 'நாங்களும் அரைக்கலாமா?", என்று கேட்க, ஷீர்டி பாபாவும் ஒப்புக்கொண்டார். அந்த பெண்மணிகள், 'பாபாவோ பிக்ஷை எடுத்து தான் வாழ்கின்றார். இவ்வளவு மாவை வைத்துக்கொண்டு அவர் என்ன செய்ய போகின்றார்! நமக்குதான் இதை கொடுக்கப்போகின்றார்', என்று தங்களுக்குத் தாங்களே நினைத்துக்கொண்டார்கள். அரைத்துமுடித்தவுடன், அந்த பெண்மணிகள், "மாவை எடுத்துக்கொள்ளலாமா?" என்று ஷீர்டி பாபாவிடம் கேட்டார்கள். இதை கேட்டவுடன் ஷீர்டி பாபாவின் முகம் மாறிவிட்டது. "இது யாருக்கும் கிடையாது. வேண்டும் என்றால் ஒன்று செய்யுங்கள். ஊர் எல்லையை தாண்டி இந்த மாவை கொட்டிவிடுங்கள்", என்று கடுமையாக சொல்லிவிட்டார். அச்சத்துடன் பக்தர்களும் அப்படியே செய்தார்கள். அடுத்த சில நாட்களிலேயே காலரா நோயும் குறைய

தொடங்கியது. அப்பொழுது தான் அனைவருக்கும் ஷீர்டி பாபா ஏன் அவ்வாறு செய்தார் என்று புரிந்தது.

ஏறத்தாழ நாற்பது வருடங்களுக்கு முன் திருவண்ணாமலையில் பகவான் யோகி ராம்சுரத்குமார் அவர்கள் ஒரு லீலையை நிகழ்த்தினார். ஒரு பிச்சைக்காரன் போல் தன்னை காண்பித்துக்கொண்டு, திருவண்ணாமலை வீதிகளில் அவர் சஞ்சரித்த காலம் அது. ஊர் முழுவதும் காலரா போன்ற ஒரு நோய் பரவி எல்லோரும் அவதிபட்டுக்கொண்டிருந்தனர். எம்முயற்சி செய்தும் நோய் கட்டுக்கடங்கவில்லை. திருவண்ணாமலை கோவில் அருகிலுள்ள தேர்முட்டியில் யோகி ராம்சுரத்குமார் அவர்கள் நின்றுகொண்டிருந்தார். தன் கண்ணெதிரே மக்கள் அவதிபடுவதை சகிக்கமுடியாதவராய் தன்னுடன் இருந்த ஒரு அன்பரிடம் அது பற்றி பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அந்த சன்னதி தெரு வழியாக வண்டி நிறைய இலந்தைப்பழங்களுடன் ஒரு வியாபாரி சென்றுகொண்டிருந்தார். ‘அந்த பழங்கள் அனைத்தையும் அவனிடமிருந்து வாங்கு’ என்று யோகி ராம்சுரத்குமார் ஆணையிட்டார். அந்த பழங்களை தேர்முட்டியின் படிகளில் பரப்பிவைக்கச் சொன்னார். அதன் பின்னர் அந்த பழங்கள் அனைத்தையும் தன் கால்களால் மிதித்து நசிக்கிக்கொண்டே ஏதோ பிரார்த்தனை செய்துகொண்டார். யோகி ராம்சுரத்குமார் நிகழ்த்திய இந்த அருள்விளையாடலுக்கு, மறுநாள் முதலே எல்லோரும் வியக்கும் வண்ணம், ஊரில் தொற்றுநோய் அடங்கத் துவங்கியது.

இந்த கொரோனா வைரஸ் பாதிப்பை பற்றி பரனூரில் நம் குருநாதர் ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவிடம் பக்தர்கள் ப்ரார்த்தித்துக்கொண்டபொழுது, “கொரோனாவைக்கண்டு யாரும் பயப்படவேண்டாம்; பீதி அடைய வேண்டாம்; பக்தகோலாஹலன் எல்லோரையும் ரக்ஷிப்பான்”, என்று அருளியுள்ளார்.

தெய்வமும் மஹான்களும் நம்மை ஒரு போதும் கைவிடுவதில்லை. நாம் எந்த மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த கலாச்சாரத்தை பின்பற்றுபவர்களாக இருந்தாலும், எந்நாட்டவர்களாக இருந்தாலும், பிரார்த்தனை என்ற விஷயத்தில் இணையவேண்டிய தருணம் இது.

உள்ளம் உருகி ஒருமித்த குரலில் நாம் ஒவ்வொருவரும் செய்யும் பிரார்த்தனை கடவுளின் செவிகளை எட்டுவது நிச்சயம். அவர் அருளால் உலகமே இந்த பாதிப்பிலிருந்து விரைவில் வெளிவருவதும் நிச்சயம். தன்னம்பிக்கையை இழக்கவேண்டாம். தைரியமாக இந்த சூழ்நிலையை எதிர்கொண்டு வெற்றிபெறுவோம்.

உலகிலுள்ள அனைத்து சகோதர சகோதரிகளுக்காகவும் நானும் தனிமையில் ஸ்ரீ ப்ரேமிக வரதனிடம் பிரார்த்தனை செய்துகொண்டே இருக்கின்றேன். மனம் தளரவேண்டாம். குழப்பம் வேண்டாம். தவறான செய்திகளை பரப்பி பிறரை குழப்பவும் வேண்டாம். நாம் அனைவரும் பாதுகாப்பாக இருக்கும் பொருட்டு தன்னலமற்ற தொண்டாற்றிவரும் மத்திய மாநில அரசாங்கங்களுக்கும், அனைத்து துறைகளுக்கும், மருத்துவர்களுக்கும், துப்புரவு தொழிலாளர்களுக்கும், காவல் துறையினருக்கும், ராணுவத்திற்கும் நாம் நன்றிக்கடன்பட்டிருக்கின்றோம். அவர்கள் நலனிற்காக கடவுளிடம் விசேஷமாக ப்ரார்த்தித்துக்கொள்வோம். தைரியத்துடனும் தியாக புத்தியுடனும் பல நாடுகளுக்கு பறந்து சென்று நம் நாட்டவரை காப்பாற்றிக் கொண்டுவந்த Air India நிறுவனத்திற்காகவும் விமானிகளுக்காகவும் நாம் பிரார்த்தனை செய்வோம்.

இதுபோன்ற ஊர் அடங்கு, நோய் பரவுவதை தடுப்பதற்கு மிக அவசியமானதே. நடுத்தரவர்க்கத்தை சேர்ந்தவர்கள்கூட சிரமங்களுடன் சில வாரங்கள் வெளியே சென்று பொருள் ஈட்டாமல் தாக்குப்பிடித்துவிடுவார்கள். அன்றாட ஊதியத்தை நம்பி வாழும் ஏழை எளியோரின் நிலையை நினைத்தால் நம் கண்கள் பனிக்கின்றன. அரசு விதிகளுக்கு உட்பட்டு நம்மால் இயன்ற அளவு நமக்கு அருகாமையில் வசிக்கும் அத்தகைய ஏழை எளியோரை பார்த்துக்கொள்ளவேண்டியது நமது பொறுப்பு. கடவுள் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார்.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து!

(உலகத்தில் எல்லோரும் இன்புற்றிருக்கட்டும்)”

இவ்வாறு ஸ்ரீ ஸ்வாமிஜி உரைத்த பதிலை எல்லோருடனும் பகிர்ந்துகொள்கின்றேன்.

- Dr ஆ பாக்யநாதன்

ஸ்ரீ ஸ்வாமிஜியின் அந்தரங்க செயலாளர்

# பக்தர்களின் கேள்விகளுக்கு

**கொரோனா வைரஸ் பரவுவதை தடுப்பதற்காக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எல்லோர் மனங்களிலும் ஒரு விதமான அச்சமும் பீதியும் நிலவுகின்றது! இந்த சமயத்தில் தனி மனிதனாக நான் என்ன செய்யமுடியும்? தங்களது அறிவுரை என்ன?**

பகவான் அன்று இந்திரன் கோபப்பட்டு பெய்யச்செய்த மழையிலிருந்து கோப-கோபியரை காக்கும் பொருட்டு கோவர்தனத்தை குடையாக தூக்கிப்பிடித்தான். ஏழு நாட்களும் கோப கோபியர் எவ்வித பயமுமின்றி பகவானின் திருவடிகளுக்கு அருகில் இருந்துகொண்டு ஆனந்தமாக நாமகீர்த்தனம் செய்தார்கள். நாமும் பகவானின் திருவடிகளுக்கு அருகில் அவன் குடையாக தாங்கி நிற்கும் கோவர்தனத்திற்கு அடியில் வசிப்பதாக பாவித்துக்கொள்வோம் சந்தோஷமாக, விடாமல் நாம சங்கீர்த்தனம் செய்துவருவோம். இந்திய அரசாங்கம், இப்பொழுது அத்யாவஸ்ய சேவைகளை தவிர மற்ற அலுவலகங்களையும், கடைகளையும், கல்வி நிறுவனங்களையும் மூட சொல்லியுள்ளது. அதுபோல், நாமும் அத்தியாவசியமான விஷயங்களுக்காக மட்டுமே நமது வாயை பயன்படுத்துவோம். உணவு உட்கொள்வோம்; வீண்பேச்சுகளில் ஈடுபடாமல் நாமம் சொல்லிக்கொண்டு அனைவருக்காகவும் பிரார்த்தனை செய்துக்கொண்டே இருப்போம்!

உடலால் சற்று விலகி, உள்ளத்தால் எல்லோரும் இணைந்திருக்கவேண்டிய காலம் இது.

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கல்பதரு தின அருளுரை

பாரதியார் தேசிய விடுதலைக்காகப் பாடுபட்டவர். அவர் பாடாத தெய்வம் இல்லை. கண்ணனை அப்படி பாடியிருக்கிறார்; பக்தர்; விடுதலை போராட்ட வீரர்; புரட்சி கவிஞர்; கவி உள்ளம் படைத்த நல்ல ரஸனையாக எழுதக்கூடிய கவிஞர்; புரட்சி சிந்தனை உடையவர் என்று பன்முகங்கள் கொண்டவர் பாரதியார். பாரதியார் பாடல்களைப் பார்த்தால், கண்ணன் மீது எழுதியிருக்கக்கூடிய பாடல்கள், இயற்கையை வர்ணித்து அவர் எழுதியிருக்கக்கூடிய பாடல்கள், நாட்டின் விடுதலைக்காக அவர் எழுதியிருக்கக்கூடிய பாடல்கள், புரட்சி சிந்தனையுடன் அவர் எழுதியிருக்கக்கூடிய பாடல்கள் என்று பலவிதமான பாடல்களைப் பார்க்கலாம்.

''கல் தோன்றி மண் தோன்றா காலத்தே
வாளோடு முன்தோன்றிய மூத்தக் குடி..''

என்று தமிழ்குடிக்கும், தமிழ்மொழிக்கும் அப்படி ஒரு பெருமை உண்டு. தமிழ் மொழியில் ஐம்பெரும் காப்பியங்கள் உண்டு. தமிழிலே அநேக இலக்கியங்கள் உண்டு. தமிழிலே எத்தனையோ புலவர்கள் பாடியிருக்கின்றார்கள். எவ்வளவோ கவிஞர்கள் வந்திருக்கின்றார்கள். தமிழிலே பாடியவர்கள் அநேகம் உண்டு. ஆனால், தமிழ் மொழியின் பெருமையை முதன்முதலில் பாடியவர் சுப்பிரமணிய பாரதியார் மட்டுமே. ''யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'', ''செந்தமிழ் நாடென்னும் போதினிலே, இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே'', ''வாழ்க நிரந்தரம், வாழிய தமிழ்மொழி, வாழிய வாழியவே'' என்று, தமிழ்மொழியை முதன்முதலில் பாடியவர் சுப்பிரமணிய பாரதியார்.

பாரதியார் இந்த பூவுலகில் நாற்பது வருடங்கள் தான் வாழ்ந்தார். அந்த நாற்பது வருடங்களில் பத்து வருடங்கள் இந்த புதுவையில் வாழ்ந்திருக்கின்றார். பாரதியார் புதுவையில் தங்கியிருக்கும்பொழுது, புதுவையில் ஒரு ஸ்வாமி இருந்தார். பாரதியார், அந்த ஸ்வாமியைப் பார்த்து, தரிசனம் செய்து, உபதேசம் பெற்று, அந்த ஸ்வாமியைப் பற்றி ஒரு பாட்டும் எழுதியிருக்கின்றார். அந்த ஸ்வாமியை குள்ளச்சாமி என்று குறிப்பிடுகின்றார்.

“தேசத்தார் இவன்பெயரைக் குள்ளச் சாமி
தேவர்பிரான் என்றுரைப்பார்; தெளிந்த ஞானி
பாசத்தை அறுத்துவிட்டான், பயத்தைச் சுட்டான்;
பாவனையால் பரவெளிக்கு மேலே தொட்டான்;
நாசத்தை அழித்துவிட்டான்; யமனைக் கொன்றான்;
ஞானகங்கை தலைமுடிமீ தேந்தி நின்றான்;
ஆசையெனும் கொடிக்கொருகாழ் மரமே போன்றான்;
ஆதியவன் சுடர்ப்பாதம் புகழ்கின் றேனே.”

என்கின்றார். இந்த குள்ளச்சாமி என்பவர், திருக்கோயிலூருக்கு அருகில் தபோவனம் என்ற ஊரிலே வந்த பக்தருக்கெல்லாம் அருள் செய்து வந்தவர் ஸ்வாமி ஞானானந்தர்.

ஸ்வாமி ஞானானந்தர் புதுவையில் சிலகாலம் தங்கியிருக்கும்பொழுது அதே நேரத்தில் சுப்பிரமணிய பாரதியும் தங்கியிருந்தார். சுப்பிரமணியபாரதிக்கு ஞானானந்த ஸ்வாமிகள் செய்த உபதேசத்தை அவருடைய தரிசனத்தைத்தான் குள்ளச்சாமி என்னும் இந்த பாட்டில் பாரதியார் தெரிவிக்கின்றார். அத்தகைய பெருமை வாய்ந்த நகரம் புதுவை மாநகரம்.

எல்லோரும் தவம் இயற்றியிருக்கின்றார்கள். எத்தனையோ பேர் தெய்வீக சாதனை செய்திருக்கின்றார்கள். இதிகாச புராண காலங்களிலிருந்து சரித்திர காலம் வரை எவ்வளவோ

பேர் எத்தனையோ விதமான சாதனைகளைச் செய்திருக்கின்றார்கள். ஸ்ரீமத் ராமாயணத்தைப் பார்த்தால் பகீரதன் என்பவன் பூமிக்கு கங்கை வரவேண்டும் என்று தவம் இயற்றினான். விஸ்வாமித்ரர், தான் ப்ரஹ்மரிஷி ஆகவேண்டும் என்று தவம் இயற்றினார். ஹிரண்யகசிபு, தனக்கு யாராலும் மரணம் வரக்கூடாது என்று தவம் இயற்றினான். துருவன், இறைவனைப் பார்க்கவேண்டும் என்று தவம் இயற்றினான். ஆனால், வங்காளத்தில் பிறந்த ஸ்ரீ அரவிந்தர், இங்கிலாந்து சென்று கல்வி கற்று, மீண்டும் இந்தியாவிற்கு வந்து, பரோடாவில் சிலகாலம் பணியாற்றி, வங்காளத்திற்குச் சென்று கல்கத்தாவில் பணியாற்றி, அப்பொழுது நடைபெற்ற சுதந்திர போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்று, சிறையிலே இரண்டு தரிசனங்கள் பெற்றார். ஒன்று, ஸ்வாமி விவேகானந்தரை பார்த்தது, மற்றொன்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைப் பார்த்தது.

அதன் பிறகு அவரது வாழ்க்கை முழுவதுமாக மாறிவிட்டது. சிறையிலிருந்து விடுதலையானவர், நேரே வங்காளத்திலிருந்து கிளம்பி வங்காளவிரிகுடா கடற்கரை அருகில் வந்து, 1910ஆம் வருடம் புதுவைக்கு வந்த ஸ்ரீ அரவிந்தர், 1950ஆம் வருடம் அவர் ஸித்தியாகும் வரை புதுவை நகரை விட்டு நகரவேயில்லை. மக்களோடு அதிகமாக கலந்து பழகவும் இல்லை. எப்பொழுதும் தனிமையில் நூல் எழுதுவதும், யோகத்தில் இருப்பதும், தியானத்தில் இருப்பதுமாகவே தன்னுடைய வாழ்க்கையைக் கழித்தார். அவர் சொல்கின்றார், "நான் முக்தி அடைவதற்காக தியானம் செய்யவில்லை" என்று குறிப்பிடுகின்றார். 'அது என்னுடைய லட்சியமும் இல்லை' என்கின்றார்.

அவர் செய்த தவமும், அவர் செய்த தியானமும், அவர் செய்த யோகமும் எதற்காக என்றால் "என்னுடைய பாரத நாடு

உலகத்தில் உள்ள எல்லா நாடுகளுக்கும் பெருமை வாய்ந்த ஜகத்குரு நாடாக வேண்டும்'' என்பதுதான். அதுதான் ஸ்ரீ அரவிந்தரின் தவத்தின் நோக்கம். பாரத நாட்டு மக்கள் தெய்வீகத்தினுடைய பலனைப் பெறவேண்டும். அவர்கள் ஆத்மசக்தியை பெறவேண்டும். நம் பாரத நாடு உலகத்தில் இருக்கும் நாடுகளுக்கு எல்லாம் வழிகாட்டியாக அமையவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் தன் வாழ்நாள் முழுவதும் யோகத்திலிருந்து தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர் ஸ்ரீ அரவிந்தர். பின்னாளில் அவருடன் அன்னையும் சேர்ந்து, ஆஸ்ரம பணிகளை நடத்தி வந்தார். அத்தகைய அரவிந்தர் வாழ்ந்த நாடு.

புதுவையில் ஆனந்தரங்கம் பிள்ளை என்பவர் வாழ்ந்துவந்தார். அவர் ஒரு துவிபாஷி. அதாவது translator என்று பெயர். அந்தக் காலத்தில் ஆங்கிலமும் Frenchஉம் கலந்த ஒரு பெருமை புதுவைக்கு உண்டு. சில காலம் புதுவை ஆங்கில ஆட்சியின் கீழ் இருந்துவந்தது. சில காலம் French ஆட்சி கீழ் இருந்துவந்தது. மீண்டும் திரும்பி சில காலம் ஆங்கில ஆட்சியின் கீழ் இருந்துவந்தது. சிறிது காலம் டட்சு ஆட்சி கீழும் இருந்தது. அப்படி மாறிமாறி இருந்து வந்தது புதுவை. அப்பொழுது அரசு புரிந்து வந்த ஆட்சியாளர்களுடன் தொடர்புகொள்ள இரண்டு மொழி தெரிந்தவர்கள் வேண்டும். அப்படி இருந்தவர்தான் ஆனந்தரங்கம் பிள்ளை.

எத்தனையோ Translators இருந்தபோதும் ஆனந்தரங்கம் பிள்ளை பற்றி குறிப்பிடுவதற்கு முக்கியமான ஒரு காரணம் உண்டு. அவர் மட்டும்தான் அந்த கால கட்டத்தில் என்ன நடந்தது என்பதை ஒரு நாட்குறிப்பாக எழுதி வைத்துச் சென்றிருக்கின்றார். அவருடைய Personal Diary - அந்த

நாட்குறிப்பின் மூலம் இன்று நாம், அந்த காலகட்டத்தில் புதுவை எப்படி இருந்தது என்றும் தமிழகம் எப்படி இருந்தது என்றும், அப்பொழுது ஆட்சி செய்த ஆட்சியாளர்களின் மனப்பான்மை எப்படி இருந்தது, மக்கள் எப்படி இருந்தார்கள் என்றும் நாம் தெரிந்துகொள்வதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. அவர் செய்த உதவி மிகவும் போற்றத்தக்கது. அவரும் புதுவையில்தான் வாழ்ந்தார். இப்படி பல பெருமைகள் உண்டு புதுவைக்கு.

இந்த புதுவையின் மிக அருகில்தான் கடலூர் இருக்கின்றது. அந்த கடலூரில் - பாடலிபுத்திரத்தை மகேந்திரபல்லவன் என்ற ஒரு அரசன் அரசாட்சி புரிந்துவந்தான். அந்த காலகட்டத்தில் அந்த இடங்களில் எல்லாம் சமணமதம் பரவியிருந்தது. திருவாமூர் என்ற ஊரில் பிறந்த மருள்நீக்கியார், இந்த பாடலிபுத்திரம் என்று சொல்லக்கூடிய திருப்பாதிரிபுலியூர் நகரத்திற்கு வந்து, அங்கு சமண மதத்திலே சேர்ந்து, அவர்கள் நடத்தக்கூடிய சமண பள்ளியில் தருமசேனர் என்ற பட்டத்துடன் முக்கியமான ஒரு பதவியை வகித்துவந்தார்.

அவருக்கு திலகவதியார் என்று ஒரு சகோதரி இருந்தார். திலகவதியார், கடலூரிலிருந்து பண்ருட்டிக்கு செல்லும் வழியில் திருவதிகை என்னும் ஊரில் அட்டவீரட்டானம் என்னும் க்ஷேத்திரங்களிலே ஒன்றான வீரட்டானேஸ்வரர் கோவிலில் இருக்கும் சிவபெருமானுக்கு தொண்டு செய்து வாழ்ந்துவந்தார். அந்த வீரட்டானேஸ்வரர் கோயில் கர்பக்ருஹத்தைப் பார்த்தால் தஞ்சாவூர் ப்ரகதீஸ்வரர் கோயில் கர்பக்ருஹ கோபுரத்தைப்போலவே இருக்கும். அளவில் சற்று குறைவாக இருப்பினும் அதே அமைப்பு. அருமையான கோவில். அந்தக்கோயிலில் இருக்கும் சிவபெருமானுக்கு தொண்டு செய்துவந்த திலகவதியாருக்கு ஒரே ஒரு பிரார்த்தனை. அது என்னவென்றால், தன்னுடைய சகோதரன்

சமண மதத்தில் இருக்கின்றானே அவன் சைவ நெறிக்கு வரவேண்டும் என்பது தான், அவர் இறைவனிடம் வைத்த ஒரே பிரார்த்தனை.

இறைவன் ஒவ்வொரு பக்தனையும் தடுத்தாட்கொள்வது ஒவ்வொருவிதமாக இருக்கும். யுத்தத்தில் ஒரு நீதி சொல்வார்கள். நேரே ஒருவரிடம் சண்டைக்குச் செல்லக்கூடாது. ஸாம, தான, பேத, தண்டம் என்று நான்கு வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்று சொல்வார்கள். ஒருவரிடம் நமக்கு கருத்து வேறுபாடு இருக்குமானால், தூது சென்று சமாதானம் பேசி அதை முடித்துக்கொள்ளவேண்டும். அந்த சமாதானம் செல்லுபடியாகாதபொழுது எதையாவது விட்டுக்கொடுத்து, தானம் கொடுத்து அந்த ஒரு பிரச்சனையை சரி செய்துகொள்ளவேண்டும். தானத்தினாலும் முடியாதபொழுது பேதம். மூன்றும் எடுபடாமல் போகும்பொழுதுதான் தண்டம் என்று சொல்லக்கூடிய யுத்தத்திற்கு வரவேண்டும்-punishment.

நாயன்மார்களில் நால்வர் மிகவும் முக்கியமானவர்கள். மணிவாசகரை திருப்பெருந்துறை என்னும் க்ஷேத்திரத்தில் இறைவன், ‘என் பின்னால் வா’ என்றார். அவரும் பின்னால் சென்றுவிட்டார். சமாதானமாக போய்விட்டார்-ஸாமம். சீர்காழியில் இருக்கும் அம்பாள் திரிபுரசுந்தரி, ஞானசம்பந்தருக்கு பால் கொடுத்து அவரை தடுத்தாட்கொண்டார் - தானம். சுந்தரமூர்த்தி நாயனார் கல்யாணத்தின்பொழுது வந்து, ‘நீ எனக்கு அடிமை’ என்று ஒரு சூழ்ச்சி செய்து அந்த சுந்தரமூர்த்தி நாயனாரை ஆட்கொண்டதால் - பேதம்.

இப்பொழுது திருநாவுக்கரசர். அவர் சமண மதத்தில் தருமசேனர் என்ற பட்டத்துடன் புகழுடன் இருக்கின்றார்.

திலகவதியாரோ சிவபெருமானிடம் இப்படி பிரார்த்தனை செய்து கொண்டிருக்கின்றார். அப்படி இருக்கும்பொழுது, ஒரு நாள், நாவுக்கரசருக்கு சூலை நோய் வருகின்றது. மந்திரங்கள், தந்திரங்கள், மருந்து என்று எத்தனை செய்தும் அந்த வியாதியானது ஒரு முடிவிற்கு வரவில்லை. அவர் நினைக்கின்றார், இத்தகைய இந்த வியாதியினால் நாம் வாழ்நாள் முழுவதும் துன்பப்படத்தான் வேண்டும் போலிருக்கின்றதே. இதற்கு எத்தனை மந்திரம் செய்தும் எதற்கும் கட்டுப்படவில்லை. நாம் எவ்வளவு நாட்கள் உயிருடன் இருக்கப்போகின்றோம் என்று தெரியாது. அதற்குள்ளாக நாம் திருவதிகைக்குச் சென்று அங்கு இருக்கும் சகோதரியான திலகவதியை ஒரு நாள் பார்த்துவிட்டு வந்துவிடுவோம் என்று திருவதிகை க்ஷேத்திரத்திற்குச் சென்று, அங்கு இருக்கும் வீரட்டானேஸ்வரர் என்ற சிவபெருமானை தரிசனம் செய்தவுடன் அந்த சூலை நோய் போய்விடுகின்றது. திருநாவுக்கரசரை பகவான் தண்டம் என்னும் நீதியால் ஆட்கொள்கின்றான்.

மகேந்திரபல்லவன் என்ற மன்னனிடம் அந்த செய்தியானது தெரிவிக்கப்படுகின்றது. நம்முடைய மதத்திலே உயர்ந்த ஒரு பதவியில் இருந்து, நம்முடைய மதத்திற்கு தூண்போல் இருக்கும் தருமசேனனை யாரோ சைவ மதத்திற்கு மாற்றிவிட்டார்கள் என்று சொன்னவுடன், மன்னன் அரசு ஆணையாக அவரை அழைத்து வா என்று அனுப்புகின்றான். அரசு ஆணை திருநாவுக்கரசருக்கு தெரிவிக்கப்படும்பொழுது அவர் பாடுகின்றார்.

“நாமார்க்கும் குடிஅல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை”

என்ற பதிகம் பாடி இனி நான் இறைவனின் ஆட்சியில்

இருக்கக்கூடிய ஒரு பிரஜையே தவிர இந்த நாட்டின் மன்னனுடைய பிரஜை இல்லை என்ற செய்தியை சொல்கின்றார். அரசன் மிகவும் கோபம் கொண்டான். ஸ்ரீமத் பாகவதத்தில், பிரஹ்லாத சரித்ரத்தைப் படிக்கும்பொழுது, அந்த பிரஹ்லாதனை ஹிரண்யகசிபு ஒரு கல்லிலே கட்டி கடலில் வீசி எறிந்தான், தீயில் தூக்கிப்போட்டான், யானையை விட்டு இடற வைத்தான், விஷம் கொடுத்தான் என்று படிக்கின்றோம் அல்லவா? அத்தகைய துன்பங்களை எல்லாம் இந்த மகேந்திர பல்லவன் என்ற மன்னன் தருமசேனன் என்று சொல்லக்கூடிய திருநாவுக்கரசருக்கு கொடுத்தான்.

கடலூரில் இருக்கும் ஸ்வாமிக்கு பாடலீஸ்வரர் என்று பெயர். அங்கு இருக்கக்கூடிய அம்பாளுக்கு ப்ரஹன்நாயகி - பெரிய நாயகி என்று பெயர். சித்திரை மாதம் உத்ஸவம் வரும். அதில் ஒரு நாள் இறைவன் கரையேற்றிவிட்டகுப்பம் என்ற ஒரு ஊருக்கு செல்வார். கரையேற்றிவிட்டகுப்பத்தில் இறைவனுக்கு எப்படி திருவிழா என்றால் நாவுக்கரசரை ஒரு கருங்கல்லால் கட்டி தேவனாம்பட்டினம் என்ற இடத்தில் படகில் சென்று நடுக்கடலில் அவரைப் போட்டுவிட்டு வரும்படியாக சொல்ல அந்தக் கல்லே மிதந்து வந்து ஒரு ஊரிலே வந்து கரையேற்றிவிட்டது. அதையும் ஒரு பாடலில் நடந்த சம்பவத்தைப் பாடுகின்றார்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றூணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சிவாயவே!

என்று, நாமத்தின் பெருமை சொல்கின்றார். பஞ்சாட்சரம்தான் என்னைக் காப்பாற்றியது என்கின்றார் திருநாவுக்கரசர்.

அந்த ஊரிலே அப்படி ஒரு உத்ஸவத்தை இறைவன் கண்டருளுகின்றான் என்பது மிகவும் நாம் அறியவேண்டியது.

(தொடரும்...)

# நிகழ்வுகள் மடல்

## Dr ஆ பாக்யநாதன்

வைதீகஸ்ரீ, ப்ரஹ்மஸ்ரீ ராஜு கனபாடிகள் அவர்களின் ஸ்ரத்தாஞ்சலி மார்ச் 8ம் தேதி Venus Colonyயில் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டார்கள். மார்ச் 9ம் தேதி மஹாப்ரபு ஜயந்தி மற்றும் ஹோலியை ஒட்டி சைதன்ய குடீரத்தில் விஷ்ணுராத பாகவதர் காலை முதல் மாலை வரை வாத்யங்களுடன் நாமகீர்த்தனம் நடத்தினார். ஆஸ்ரமத்தில் மாலை ப்ரேமிகவரதன் புறப்பாடு கண்டருளினார். மார்ச் 10ம் தேதி அன்று கிளம்பி ஸ்வாமிஜி காங்கேயம் சென்று அடைந்தார். காங்கேயம் வானரராஜசிம்ம ஸ்வாமிக்கு லகு ஸம்ப்ரோக்ஷணம் மார்ச் 12ம் தேதி காலை நடைபெற்றது. ஸம்ப்ரோக்ஷணமானவுடன் ஸ்ரீ ஸ்வாமிஜி புறப்பட்டு சத்தியமங்கலம் சென்றார். அங்கு, ஸ்ரீ அனந்தநாராயணன் வீட்டில் நாம கேந்த்ரா செயல்பட்டுவருகின்றது. ஸ்ரீ ஸ்வாமிஜி அங்கு விஜயம் செய்து அருளினார். சத்யமங்கலத்திலிருந்து மார்ச் 12ம் தேதி மாலை உடுமலைபேட்டை நாமத்வார் சென்றடைந்தார். அன்றுமாலை துளசிதாசர் சரித்ரம் உபந்யாசம் செய்தார். அன்று இரவு உடுமலைபேட்டையில் தங்கிவிட்டு மறுநாள் அதிகாலை கிளம்பி கோயம்பத்தூர் சென்றார். கோவை ராம் நகர் ராமர் கோவிலில் ப்ரஹ்மஸ்ரீ ஜம்புநாதகனபாடிகள் கனபாராயணம் ஒரு மாதமாக நிகழ்த்தி வந்தார். 13ம் தேதி காலை அந்த வேதபாராயணத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அங்கிருந்து பெரியகுளம் நாமத்வார் சென்றடைந்தார். நீராடி, ஜபம் எல்லாம் செய்து விட்டு தேனி கிளம்பினார். நமது சிவகாசி ஸ்ரீ சந்திரபிரகாசின் மகள் பாரதி அவர்கள் தேனியில் நாம கேந்திரம் நடத்தி, ஓயாமல் நாமபிரசாரம் செய்து வருகின்றார்கள். கோப குடீரமும் நடத்தி வருகின்றார்கள். அங்கு கோபகுடீர குழந்தைகளின் நிகழ்ச்சி நன்றாக நடந்தது.

மார்ச் 14, 15 பெரியகுளம் நாமத்வாரில் ராதாகல்யாணம் நடந்தது. சில பக்தர்களின் அழைப்பின் பேரில் அவர்களுடைய இல்லங்களுக்கு ஶ்ரீ ஸ்வாமிஜி விஜயம் செய்தார். ஶ்ரீ ஸ்வாமிஜி, தன்னுடைய பள்ளியாகவே நினைத்து வரும் ரேணுகா வித்யாலயா பள்ளிக்கு விஜயம் செய்தார். மார்ச் 14, 15 பெரியகுளம் நாமத்வாரில் சத்சங்கங்களை முடித்துக்கொண்டு மார்ச் 15 மாலை புறப்பட்டு மதுரை வந்து தங்கினார். மார்ச் 16 மாலை சென்னை வந்து சேர்ந்தார்.

அரசாங்கத்தின் அறிவிப்பை அடுத்து அன்று முதல் நமது வேதபாடசாலைகளுக்கு விடுமுறை விடப்பட்டது. நமது ஆஸ்ரம வளாகம், கோவில்கள், நாமத்வார் மையங்கள், மற்றும் சத்சங்க மையங்களில் பக்தர்கள் கூடுவது முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. ஶ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ப்ரேமிகபவனத்தில் தங்கியுள்ளார். வழக்கம் போல் ஜபம், த்யானம், பூஜை, நாமம், கீர்த்தனம் எல்லாம் நடந்து வருகின்றது. 20ம் தேதி ஏகாதசி பூஜையை ப்ரேமிகவரதனுக்கு ஶ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் செய்தார்கள். நமது வேண்டுகோளுக்கு செவிசாய்த்து பக்தர்கள் அவர் அவர்கள் இல்லங்களில் இருந்தபடியே நாம கீர்த்தனம் செய்தார்கள். நமது சத்சங்க அன்பர்களின் இந்த கட்டுப்பாடு வியக்கத்தக்கதாக இருந்தது. 22ம் தேதி முதல் ப்ரேமிகபவனத்தில் ராமாயண பாராயணமும் நடந்து வருகின்றது.

அரசாங்கத்தின் அறிவிப்பை ஒட்டி எல்லாம் மூடப்பட்டன. ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. "அன்றாட வருமானத்தை நம்பி வாழ்பவர்கள் என்ன செய்வார்கள்? நம்மிடம் பசுமாடுகள், நாமம் சொல்ல சிலர், வேதபாடசாலை இவைகள் தான் உள்ளன. பெரிய establishment கிடையாது. நமது பக்தர்கள் அன்புடன் தாமாக முன்வந்து கொடுக்கும் நன்கொடைகளை வைத்துக்கொண்டு இது நாள் வரை கௌரவமாக நடத்தி கொண்டு வருகின்றோம். அதே சமயத்தில், அன்றாட வருமானத்தை நம்பியுள்ளவர்களுக்கு நம்மால் முடிந்த ஒரு சிறு உதவியையாவது

செய்ய வேண்டும்'' என்று, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கவலைப்பட்டார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜியின் வழிகாட்டுதலின்படி Sri Sandeepani Gurukula Trust, Jaya Hanuman Seva Trust மற்றும் Global Organisation for Divinity India Trust மூலமாக உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. Jaya Hanuman Seva Trust சார்பில் பிரதம மந்திரியின் PM-CARES Fundற்கு ₹3 லக்ஷம், Sri Sandeepani Gurukula Trust சார்பில் தமிழ்நாடு முதலமைச்சரின் Public Relief Fundற்கு ₹2 லக்ஷம் மற்றும் Global Organisation for Divinity India Trust சார்பில் தமிழ்நாடு முதலமைச்சரின் Public Relief Fundற்கு ₹2 லக்ஷம் வழங்கப்பட்டது. ப்ரேமிகபவனத்தை சுற்றியுள்ள ஆட்டோ ஓட்டுனர்கள், பூ-விற்பவர்கள், சலவை தொழில் செய்பவர்கள் போன்றவர்களுக்கு சிறுதொகை கொடுக்கப்பட்டது. இந்த சமயத்தில் (இந்த 21 நாட்கள்) அல்லும் பகலும் காவல்துறையினர் நமக்காக சேவை செய்து வருகின்றார்கள். நம் இடத்தை சுற்றி சேவை புரிந்து வரும் காவலர்களின் உணவு தேவையை கவனித்துக் கொள்ளும் பொறுப்பை ஸ்ரீ ஸ்வாமிஜி நவநீதகிருஷ்ணனிடம் கொடுத்துள்ளார்கள். Chess Master ஸ்ரீ கொம்பையாவை அழைத்து தினமும் தெருவில் திரியும் மாடுகளுக்கு அகத்தி கீரையும், நாய்களுக்கு bun, biscuit போன்றவைகளை கொடுக்க ஏற்பாடு செய்துள்ளார். தினமும் பறவைகளுக்கு தான்யங்கள் போடப்படுகின்றது. ஒருநாள், நிறைய வடை செய்ய சொல்லி மொட்டைமாடியில் காக்கைகளுக்கு விருந்து வைத்தார். நம் மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் தினமும் மதியம் 500 உணவு பொட்டலங்கள் தயார் செய்து கிராம நிர்வாகங்கள் மூலமாக ஏழை எளியோருக்கும், வெளி மாநிலங்களிலிருந்து வந்து இங்கு தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பணியாட்களுக்கும் உணவு வழங்கிவருகின்றோம்.

ஸ்ரீ ப்ரேமிக வரதன் மெடிக்கல் சென்டர், COVID-19 விழிப்புணர்வு மையமாக செயல்பட்டுவருகிறது. திருவிடைமருதூர் காவல் நிலையங்களுக்கு, காவலாளர்கள் பயன்படுத்துவதற்காக

முக கவசங்கள் மற்றும் கையுறைகள் வழங்கப்பட்டன. கும்பகோணத்திற்கு அருகிலுள்ள **சேங்கனூர், கோவிந்தபுரம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள்** Panchayat அலுவலகங்கள், VAO மற்றும் Revenue அலுவலங்கள், Block Development அலுவலகங்கள், தபால் நிலையங்கள், Tahsildar அலுவலகங்க**ளில்** முக கவசங்கள், மற்றும் கையுறைகள் வழங்கப்பட்டன. **சேங்கனூரிலுள்ள** இல்லங்களில் Soap, Sanitizer மற்றும் COVID-19 பற்றிய விழிப்புணர்வு noticeகள் கொடுக்கப்பட்டன.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் தினமும் உலக மக்களின் நன்மைக்காக விடாமல் நாமம் சொல்லி கொண்டுள்ளார். Online livestreaming மூலமாக ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அன்றாடம் இரவு 9-10 மணிவரை Corona Virus பாதிப்பு விலகவேண்டி ஒரு பிரார்த்தனையாக செய்துவரும் மஹாமந்த்ர ஜபத்தில் பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் உலகெங்கிலுமிருந்து கலந்துகொண்டு வருகின்றார்கள்.

## *COVID-19* தடுப்பு மற்றும் நிவாரண பணிகளில் நமது சேவை

**ஸ்ரீ ஸ்வாமிஜி Auto ஓட்டுனர்களுக்கு காசோலைகள் வழங்கினார்கள்**








**மதுரபுரி ஆஸ்ரமத்தில் Community Kitchen நிர்வாகம்:**
**ஸ்ரீ ஸ்ரீதர், பம்மல் ஸ்ரீ பாலாஜி**










**ஸ்ரீ ப்ரேமிக வரதன் Medical Centre - Dr சரஸ்வதி, Dr கணேஷ், Dr வெங்கடேஷ், Co-Ordinator ஸ்ரீ ரங்கராஜன்**




**சென்னை MGR நகர், KK நகர், அசோக் நகர் காவல் நிலையங்களுக்கு உணவு வழங்குதல் - ஸ்ரீ நவநீதகிருஷ்ணன்**



**விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு உணவு வழங்குதல் - ஸ்ரீ கொம்பைய்யா**




சேங்கனூர், கோவிந்தபுரம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஆகிய இடங்களிலுள்ள காவல் நிலையங்கள், Panchayat அலுவலகங்கள், VAO, BDO, தபால் நிலையங்கள், Tahsildar அலுவலகங்களில் முக கவசங்கள், கையுறைகள்; மற்றும் சேங்கனூரிலுள்ள இல்லங்களில் Soap, Sanitizer மற்றும் COVID-19 பற்றிய விழிப்புணர்வு noticeகள் வழங்குதல் - ஸ்ரீ வெங்கடேசன், ஸ்ரீ சுந்தரராமன், ஸ்ரீ ஸ்ரீனிவாசன், ஸ்ரீ விஷ்ணுராத பாகவதர், ஸ்ரீ M வெங்கடேஷ்

**('பக்தி ஏணி படிகள்' என்ற இந்த அரிய மதுரகீதத்தின் விளக்கவுரையின் இறுதி பகுதி இது. மஹான்களின் வாக்கு ஆழ்கடலைவிட கம்பீரமானதாகும். அதை 'புரிந்து கொண்டுவிட்டோம்' என்ற எண்ணமும் குழந்தைத்தனமே! ஆனாலும் இவை 'மதுர'கீதம் அல்லவா? இதன் இனிமையும் அனந்தமே! அதில் மிகச் சிறிதளவே நம்மால் அனுபவிக்க முடிகிறது. அதுவே நமக்கு ஒரு பேரானந்தத்தை கொடுத்துவிடுகிறது.
அவ்வாறுதானே இந்த தொடரும்...)**

**ஸ்ரீ ஸ்வாமிஜி, '18' என்ற எண், 'ஜய'த்தை குறிக்கும் என்று அடிக்கடி கூறுவார்கள். நமது பாரத மொழிகளில் ஒவ்வொரு எழுத்திற்கும் ஒரு எண்ணின் சம்பந்தம் உண்டு. 18 என்ற எண், ஜயத்தை, அதாவது வெற்றியைக் குறிக்கும். இதற்கு நம் ஸத்குருநாதர் காட்டும் உதாரணங்கள் பல, விரிவிற்கு அஞ்சி அதை இங்கு காட்டவில்லை.**

# பக்தி ஏணி படிகள்

**- ஸ்ரீ MK ராமானுஜம்**



நமது பக்தி ஏணிப் படிகளும் பதினெட்டே! பல பிறவிகளாக சம்சாரத்தில் மூழ்கி அவதியுரும் ஒரு ஜீவன், இந்த பக்தி ஏணிப்படிகளில் அசராது ஏறினால் இந்த சம்சாரத்தையே வெற்றி பெறலாம் என்று காட்டுகிறாரோ?

18வது வரி, இதையே சூசனை செய்கின்றது. இந்த அழகான மதுரகீதத்தின் சாரத்தை இப்போது பார்ப்போமா?

“அவர் மிகவும் மத ஈடுபாடு கொண்டவர்!” என்று ஒருவர் சொல்லக்கேட்டால், நாமும், “எப்படி சொல்லுகிறீர்கள்?” என்று கேட்டால், பொதுவான பதில், “அடிக்கடி அவர் கோயில்களுக்கும், புண்ணிய தலங்களுக்கும், தீர்த்தங்களுக்கும் சென்று வருவார்” என்றுதானே வரும்? அதுவே முதல் படியாம்.

அடுத்து ஆலயங்களில் சேவை செய்து, தன்னலமற்று, பிறர் நலம் பேணுவதாகும். இந்த உயரிய மனப்பான்மையினால் இறைவன் இன்புற்று ஒரு பெரிய வரப்ரசாதத்தை அருளிவிடுகின்றான். அதுவே ஸாதுஸங்கமாகும்.

ஸாது ஸங்கத்தில் சத்கதைகளையும், தெய்வீக விஷயங்களையும் கேட்கக்கேட்க நமக்கும் தெய்வீகத்தில் உயர வேண்டும் என்ற தாகம் ஏற்படும்.

கண்ணனும் தன் கருணையினால் ஒரு ஸத்குருநாதரை நம்முடன் சேர்த்து வைப்பான். பிறகு கபடமற்று ஸத்குரு சேவை செய்யும்போது, உசித காலத்தில் குரு உபதேசமும் கிட்டும். பிறகு சிறிது சிறிதாக ஹரிபக்தி சாதனைகளை செய்யும் பக்குவம் வரும் - ஏகாதசி விரதம், ஹரி கதை கேட்பது, ஹரி பஜனை செய்வது, ஹரி தரிசனம், ஹரி சிந்தனம், என்று படிப்படியாய் சாதனையில் முன்னேற்றம் ஏற்படும்.

முன்னேற்றத்திற்கு பின்னடைவு ஏற்படாது தன்னை காத்துக் கொள்ளும் பொருட்டு, பணிவு, மனவுறுதி, தன்னை சுய பரிசோதனை செய்து கொள்ளல், போன்றவைகளைக் கொண்டு, பிறரிடம் குற்றம் பார்த்தல், காமம், கோபம், தற்புகழ்ச்சி, உறக்கம், சோம்பல் இவைகளைத் தவிர்க்கவேண்டும்.

ஏணிப்படிகளிலிருந்து சரியாமலிருக்க உலக சுகநாட்டத்தை அரவே கிள்ளிக் களையவேண்டும். ‘நான்’ ‘நான்’ என்ற அகந்தையை போக்க பிறர் புகழ்ந்தாலும் அதை ஊக்குவிக்க கூடாது; அதை காதில் போட்டுக்கொள்ளவும் கூடாது.

பிறகு இறை-குரு அருளால் அகண்டமான நாம ஸ்மரணம் ஏற்படும், நடப்பவைகளை சாட்சியாக, ஹரியின் திவ்ய லீலையாகவே பார்க்கும் பக்குவம் ஏற்படும்.

இப்படி அயராது, விடாமுயற்சியுடன் முன்னேறி, ப்ரேம பக்தி என்ற அம்ருதமான நிலையை அடைந்து, கண்ணனின் அருளால், அகண்டமான ஆனந்தத்தில் ஒன்றிவிடலாம். இதுவே நம் வாழ்வின் உண்மை பயன்! இதுவே நம் வாழ்க்கையின் பரமான லாபம்! இதுவேதான் நமக்கு சத்தியமான ஜயம்! நம் ஸத்குருவின் அருளாலும், நம் ராதை கண்ணனின் கிருபையாலும் இந்த ‘பக்தி ஏணிப் படிகள்’ தொடர் நிறைவு பெறுகின்றது.

ராதே! ராதே!

Guruji Sri Muralidhara Swamigal Mission
is delighted to announce the launch of
ONLINE PAYMENT PORTAL
for the ease of our readers.
To subscribe or renew subscription online,
http://www.gurujisrimuralidharaswamigalmission.org/

# பாலகர்களுக்கு ஒரு கதை

## உயர்ந்த ப்ரேமை

குரு ஒருவர் தனது சீடர்களுடன் சென்று கொண்டிருந்தார். வழியில் சிலர் கூட்டமாக நின்றுகொண்டு சத்தமாக திட்டிக் கொண்டும் சண்டை போட்டுக்கொண்டும் இருந்தனர். குரு, தனது சீடர்களிடம், "கோபமாக இருக்கும் பொழுது நாம் ஏன் குரலை உயர்த்தி பேசுகின்றோம்?" என்று கேட்டார்.

சீடர்களுள் ஒருவர், "நாம் பொறுமையையும் அமைதியையும் இழக்கும்பொழுது குரல் அப்படி ஆகிவிடுகின்றது", என்றார்.

"அருகில் இருப்பவர்களிடம்கூட குரல் உயர்த்தி ஏன் பேசவேண்டும்?’, என்றார் குரு. சீடர்களுக்கு பதில் தெரியாமல் அமைதியாக இருந்தனர்.

"நமக்கு மற்றவர் மீது கோபம் வரும்பொழுது, நம் மனதிற்கும், அவர்கள் மனதிற்கும் இடைவெளி அதிகமாகின்றது. அந்த தூரத்தை தாண்டி நாம் பேசுவது அவர்களை சென்றடையவேண்டும். அதனால் குரலை உயர்த்தி பேசுகின்றோம். கோபம் அதிகமாக ஆக, தூரம் கூடுகின்றது. அதனால் குரலும் உயர்கிறது", என்றார்.

மேலும், "நாம் அன்பாக பேசும்பொழுது மெதுவாக, பேசுகின்றோம். ஏனென்றால், மனதால் நாம் அப்பொழுது நெருங்கியுள்ளோம். அன்பு இன்னும் அதிகமாகும்பொழுது, மிகவும் மெல்லமாக பேசுகின்றோம். அன்பின் உச்சகட்டத்திலோ, பேச்சிற்கான அவசியமே இருப்பதில்லை! மௌனமே பாஷை ஆகிவிடுகின்றது. எனவே, மௌனமே உயர்ந்த ப்ரேமையின் அடையாளம்", என்று விளக்கினார் குரு. சீடர்களுக்கு இப்பொழுது தெள்ளத்தெளிவாக புரிந்துவிட்டது.

மாதம் ஒரு
ஸம்ஸ்க்ருத வார்த்தை

# मणि
# மணி

ஸ்ரீ விஷ்ணுப்ரியா

மணி என்றால் ரத்னம். பல வேறு சொற்களுடன் சேரும்போது, பல புதுமையான அர்த்தங்களும் வார்த்தைகளும் உண்டாகின்றன. அவைகளில் சிலவற்றை பார்ப்போம்.

'சூடாமணி' என்றால் ஸ்த்ரீகள் தங்களது 'சூடா' என்று சொல்லக்கூடிய உச்சந்தலையில் தரித்துகொள்ளும் ஒரு மணி அல்லது ஆபரணம். சீதா தேவி சூடாமணி தரித்திருந்தது மிகவும் ப்ரஸித்தம்.

'விவேக சூடாமணி' என்று ஒரு க்ரந்தம் எழுதியுள்ளார் ஆதி சங்கரர். விவேகம் என்னும் சூடாமணியை நாம் சிரஸில் (புத்தியில்) எப்பொழுதும் தரிக்கவேண்டும் என்று பொருள்.

'சிரோன்மணி' அல்லது 'சிகாமணி' என்றாலும் தலையில் தரிக்கும் ஆபரணம் என்று பொருள். ஆனால், எதிலாவது மிக சிறந்தது அல்லது ஸ்ரேஷ்டமானதை குறிக்கும்போது இந்த சொற்களை உபயோகிப்பார்கள். உதாரணத்திற்கு 'பாகவத சிரோன்மணி', 'பண்டித சிரோன்மணி' என்பது போல்.

‘சிந்தாமணி’ என்ற கல் எல்லோரும் அறிவோம். ‘சிந்தாமனிர் லோகஸ¬கம்’ என்பதுபோல் அந்த கல்லை வைத்து கொண்டு நாம் சிந்தையில் எதை ஆசைப்பட்டாலும் அது கொடுக்குமாம். ‘மணித்வீபம்’ என்று, ஒரு த்வீபம் அதாவது தீவு உள்ளதாக சௌந்தர்யலஹரி என்னும் ஸ்தோத்திரத்தில் ஸ்ரீ ஆதிசங்கரர் கூறுகிறார்.

"ஸீதாஸிந்தோர் மத்யே ஸூரவிடபிவாமீ பரிவ்ருதே
மணித்வீபே நீபோபவனவதி சிந்தாமணி க்ருஹே"
- என்கிறார்.

அம்ருதக் கடலின் மத்தியில் ரத்தினங்களாலான ஒரு தீவு. அதைச் சூழ்ந்து, கல்பக வ்ருக்ஷங்கள். அந்தத் தீவில், முன்பு சொன்ன சிந்தாமணிக் கல்லாலான ஒரு வீடு. அத்தகைய இடத்தில் அம்பாள் வசிக்கிறாள் என்கின்றார்.

அதேபோல், ‘மணிமண்டபம்’ என்பது ஆதிசேஷனின் இருப்பிடம் ஆகும். ஆதிசேஷன் முதல் எல்லா பாம்புகளின் படங்களிலும் மணிகள் இருக்குமல்லவா? அதற்கு "பணமணி" என்று பெயர். ஏனென்றால் ‘பண’ என்றால் (HOOD) அல்லது படம்.

‘தினமணி’ என்று ஒரு வார்த்தை உள்ளது. ‘தின’ என்றால் பகல். பகலில் மணியை போல் ஜ்வலிக்கக் கூடிய சூரியனுக்கு தினமணி என்று பெயர்.

‘தினமணி மண்டல மண்டன’ என்று அஷ்டபதியில் ஜயதேவர் - அத்தகைய ஸூர்ய மண்டலத்திற்கே பூஷணமாக ஜ்வலிக்கிறான் பகவான் என்று பாடுகிறார்.

‘மணிபூரகம்’ என்று ஒரு யோக சக்ரம் உள்ளது. எட்டு சக்கரங்களில் ஒன்றான அது உடலில் தொப்புள் அருகே உள்ளது. இந்த சக்ரம் விழிப்படைவதால் ஊக்கமும், தன்னம்பிக்கையும் அதிகமாகும்.

‘மணிப்ரவாளம்’ என்பது ஒரு விதமான பாஷை. தமிழும் ஸம்ஸ்க்ருதமும் கலந்து இருக்க கூடியது. அது தென்னிந்தியாவில் பிரபலமாக இருந்தது. வைஷ்ணவ ஆசார்யர்கள் பலர் இந்த பாஷையில் தான் வ்யாக்யானங்கள் எழுதி உள்ளனர். ‘மணி’ என்றால் இங்கு மாணிக்கம் (ruby). ப்ரவாளம் என்றால் பவழம் (coral). மாணிக்கமும் பவழமும் மாற்றி மாற்றி கோர்த்தது போல் இந்த இரு பாஷைகளும் அழகாக இணைந்து கேட்பதற்கு அழகாக இருக்கும்.

மணிமுத்தாறு என்று ஒரு நதியை நாம் அறிவோம். ‘மணிமுக்தா’ என்ற ஸம்ஸ்க்ருத பெயரிலிருந்து தான் அந்த பெயர் வந்துள்ளது.

‘மணிபந்தம்’ என்று ஒரு சொல் உள்ளது. Wrist என்று அர்த்தம். தமிழிலும் நாம் மணிகட்டு என்று அதே அர்த்தத்தில் சொல்லுகிறோம்.

‘மணிக்ரீவன்’ என்பவன் மிக ப்ரஸித்தம். நளகூபர-மணிக்ரீவன் என்ற குபேர புத்திரர்களில் ஒருவன். நாரதரின் சாபத்தால் கோகுலத்தில் மரமாகி பின்பு தாமோதரனால் முறிக்கப்பட்டு மீண்டும் தன் லோகத்திற்கு சென்றான்.

‘மணிபுஷ்பகம்’ என்று ஒரு சங்கின் பெயர். மஹாபாரத யுத்தத்தை ஆரம்பிக்கும்பொழுது அவரவர்கள் தங்கள் சங்கை ஊதினார்கள் என்று பாகவத்கீதை கூறுகிறது.

‘நகுல: ஸஹதேவஷ்ச ஸுகோஷமணிபுஷ்பகௌ’ - என்று நகுலன் ஸுகோஷம் என்ற சங்கையும் ஸஹதேவன் மணிபுஷ்பகம் என்ற சங்கையும் ஊதினான் என்றும் கூறுகிறது.

# ஸ்ரீ நாம்தேவ் மஹராஜ் சரித்ரம்

15

ஷிவ் கன்யா - ஸ்ரீ கன்யா

நாமதேவர் இப்பொழுது ஒரு ஸம்ஸாரி. ஆனால் அது, அவருடைய பக்திக்கு எந்த விதத்திலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. அவருடைய மனைவி ராஜாயியும், அவருக்கு பரம அனுகூலமாகவே இருந்து வந்தாள். தினமும் அவர் கோவிலுக்கு கிளம்பும் முன்பே, அவருக்கு பூஜைக்கு தேவையான அனைத்து பொருட்களையும் எடுத்து வைப்பாள். அவர் பஜனை செய்வதற்கு தம்புரா எடுத்து கொடுப்பாள். அவர் அன்னம் உட்கொள்ளாமல் கோவிலிலேயே பஜனை செய்து கொண்டு இருந்துவிட்டால், ராஜாயீ அவருக்கு ஆகாரம் கொண்டு செல்வாள். இவ்வாறாக அவருடைய பக்திக்கோ, பஜனைக்கோ, எந்த விதத்திலும் பங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொண்டாள்.



தாயார் கோணாபாயுக்கு இதைக் கண்டு ஆனந்தமாக இருந்தாலும், அவளுக்கு தன் குழந்தை மற்ற குழந்தைகள் போல், வேலை செய்து, சம்பாதித்து, குடும்பத்தை பார்த்துக்கொள்ளவில்லையே, என்று வருத்தம் கொண்டாள். கல்யாணத்திற்கு பிறகாவது நாமதேவர் மற்றவர்கள் போல் இருப்பான் என்று எண்ணினாள். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.

நாமதேவரோ இப்பொழுதெல்லாம் அனவரதமும் கோவிலிலேயே இருக்க ஆரம்பித்துவிட்டார். ஆகையால், கோவிலுக்குச்

**சென்று, நாமதேவருக்கு புத்திமதி எடுத்து சொல்லி, எவ்வாறாவது க்ருஹத்திற்கு அழைத்து வர வேண்டும் என்று தீர்மானித்தாள் கோணா பாய்.**

**ஒரு நாள் நாமதேவரை தேடிக்கொண்டு வேகவேகமாக கோவிலுக்கு சென்றாள். அங்கு நாமதேவர் ஆனந்தமாக பகவான் பாண்டுரங்கனின் முன்பு நின்று, பாடிக்கொண்டு இருந்தார்.**

**கோணாபாய் நாமதேவரை பார்த்து பேசத் தொடங்கினாள், "நாமதேவா நீ செய்வது நியாயமாக இருக்கிறதா? உனக்கும் இப்பொழுது ஒரு குடும்பம் இருக்கிறது. நீ இவ்வாறு அனவரதமும் பஜனை செய்துகொண்டு இருந்தால், குடும்பத்தை யார் கவனிப்பார்கள்? பாண்டுரங்கனே, புண்டலீகன் அவனுடைய அம்மா அப்பாவிற்கு கைங்கர்யம் செய்வதைக் காணவே இங்கு வந்து இன்று வரை நின்று கொண்டிருக்கிறான். ஆனால் நீ இவ்வாறு உன் குடும்பத்தைக் கவனிக்காமல் இருந்தால், பாண்டுரங்கன் ஒப்புக்கொள்வானா? நானும் எவ்வளவோ பக்தர்களை பார்த்ததுண்டு. அவர்கள் பக்தி செய்துகொண்டு குடும்பத்தையும் பார்த்துக் கொண்டார்களே! நீ மட்டும் ஏன் இவ்வாறு செய்கிறாய். துணிகளை தைத்து, அவைகளை பஜாருக்கு போய் விற்க வேண்டாமா? அப்பொழுது தானே நாம் அனைவரும் உணவு உட்கொள்ளமுடியும்? உன் ஸம வயதில் உள்ள அனைவரும், வேலைக்கு சென்று குடும்பம், குழந்தைகளுடன் சந்தோஷமாக இருக்கிறார்கள். நீ மட்டும் ஏன் இவ்வாறு செய்கிறாய் நாமதேவா. ஆகையால் வீட்டிற்கு வா. உன் குடும்பத்தை கவனி".**

**நாமதேவருக்கு தாயாரின் ஆதங்கம் புரிந்தாலும், அவரால் அம்மா சொல்வது போல் நடந்து கொள்ள முடியவில்லை.**

**ஸ்ரீமத் பாகவதத்தில், ப்ரஹலாதன் கூறுகிறான்,**

यथा भ्राम्यत्ययो ब्रह्मन् स्वयमाकर्षसन्निधौ ।
तथा मे भिद्यते चेतश्चक्रपाणेर्यदृच्छया ॥

யதா ப்ராம்யத்யயோ ப்ரஹ்மன் ஸ்வயம் ஆகர்ஷஸன்னிதௌ ।
ததா மே பித்யதே சேதஸ்சக்ரபாணேர்யத்ருச்சயா ॥

"எவ்வாறு ஒரு இரும்பு துண்டானது, தானாகவே காந்தத்தை நோக்கி இழுக்கப்படுகிறதோ, அதுபோல் என் மனமும் தானாகவே அந்த பகவானான சக்ரபாணியை நோக்கி இழுக்கப்படுகிறது." அது போல், நாமதேவராலும் உலகவிஷயங்களில் ஈடுபடமுடியவில்லை. ஒருவருக்கு மூச்சுவிடாமல் எவ்வாறு உயிர் வாழமுடியாதோ, அதுபோல் நாமதேவருக்கு அனவரதமும் பகவான் பாண்டுரங்கனை நினைக்காமலோ, தரிசனம் செய்யாமலோ இருக்கமுடியவில்லை. அவர் தாயாரிடம் கூறுகிறார், "அம்மா, எனக்கு பாண்டுரங்கனின் முன்பு ஆடிக்கொண்டும் பாடிகொண்டும் இருப்பதில்தான் சந்தோஷம். அனைத்து பாகவதர்களும் சேர்ந்து தாளங்களோடு பஜனை செய்வதை பார்க்கும்போதும், அவர்கள் பண்டுரங்கனின் முன்பு நின்று ஆடிகொண்டிருப்பதை பார்க்கும்போதும் தான் எனக்கு சுகம் ஏற்படுகிறது. இந்த தேஹம், வீடு, ஸம்ஸாரம் அனைத்திலும் எனக்கு நாட்டமில்லை. அதனால் தான் நான் இங்கேயே இருக்கிறேன்.

நம் அனைவரையும் பகவான் பாண்டுரங்கன் காப்பாற்றுகிறான். என்னையும் அவன் தான் பார்த்துக்கொள்கிறான். ஆகையால் குடும்பத்தை பற்றி கவலைப் படவேண்டிய அவசியமே இல்லையே அம்மா. அவனை மட்டுமே அண்டி இருந்து அவனிடத்தில் சரணாகதி செய்த பக்தர்களை அவன் ஒரு பொழுதும் கை விட மாட்டன். ஒருவன் கோடி கணக்கில் பாபங்கள் செய்துவிட்டு, ஆனால் கடைசியில் பகவான் பாண்டுரங்கனிடம் சரணாகதி செய்தால் கூட, அவனையும் பகவான் கை விடுவதில்லை என்பது அவனின் புகழ். அப்பேர்பட்ட க்ருபாளு இந்த பாண்டுரங்கன். அவனே என்னுடைய அப்பா, என்னுடைய அம்மா, என்னுடைய தோழன், என்னுடைய சொந்தங்கள். இந்த லோகத்தில் அனைத்தும் எனக்கு அவன் ஒருவனே. ஆகையால், என்னை என் பாண்டுரங்கனிடமிருந்து பிரிக்க முயலாதே அம்மா."

# ஆன்மீக முன்னேற்றத்தின் உண்மையான அறிகுறி

**- Dr ஆ பாக்யநாதன்**

சில வருடங்களுக்கு முன் ஒரு நாள் மாலை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களை தரிசிக்க நம்முடைய மதுரபுரி ஆஸ்ரமத்திற்கு ஒரு வயதான தம்பதியினர் வந்திருந்தார்கள். அவர்களைக் கண்டவுடன் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் முகத்தில் ஒரு மலர்ச்சி. எங்கே உங்களை சென்ற ஏகாதசியன்று காணவில்லை?” என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் வினவ, அந்த தம்பதியினருக்கு நூற்றுக்கணக்கான பக்தர்களுக்கு மத்தியில் நாம் வரவில்லை என்பதை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் மிகவும் துல்லியமாக கவனித்துள்ளார்களே!” என்று ஒரு பூரிப்பு.

பக்தர் – எங்கள் சொந்த ஊருக்குச் சென்றிருந்தோம். அதனால்தான் ஏகாதசி தரிசனத்திற்கு வரவில்லை”

ஸ்ரீ ஸ்வாமிஜி – சொந்த ஊரில் என்ன விசேஷம்?

பக்தர் – ஊரில் ஒரு கல்யாணம். அதற்காகச் சென்றிருந்தோம். சென்ற இடத்தில் ஒரு ஸ்வாரஸ்யமான விஷயம் நடந்தது.

ஸ்ரீ ஸ்வாமிஜி – ஸ்வாரஸ்யமா..! என்ன அது? ஒரு குழந்தையின் ஆர்வத்துடன் கேட்டார்

பக்தர் – எங்கள் ஊரில் ஒரு குறிசொல்பவர் வந்திருந்தார். அவருக்கு கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் மற்றும் எல்லா விஷயங்களும் தெரிந்திருந்தது. அந்த ஜோதிடரைப் பார்க்க

வந்திருந்த ஒவ்வொருவரையும் அவர் பார்த்தவுடனேயே அவர்கள் வியக்கும் வண்ணம் பல விஷயங்களைச் சொன்னார்.

ஸ்ரீ ஸ்வாமிஜி – நீங்களும் சென்று பார்த்தீர்களா?

பக்தர் – ஆம் ஸ்வாமிஜி! அவர் ஒரு ஆச்சரியமான விஷயத்தை என்னையும் என் மனைவியையும் பார்த்துச் சொன்னார். அதாவது நாங்கள் இருவரும் இரு தேவதைகளின் அவதாரம் என்றும் எங்களுக்கே அந்த விஷயம் தெரியாது என்றும் சொன்னார். இதைக் கேட்டதிலிருந்து எங்களுக்கு ஒரே பரபரப்பும் சந்தோஷமாகவும் இருந்தது. இதை நாங்கள் ஆன்மீகப் பாதையில் முன்னேறிய நிலையில் இருக்கின்றோம் என்று எடுத்துக்கொள்ளலாமா?

ஸ்ரீ ஸ்வாமிஜி – உண்மையான ஆன்மீக முன்னேற்றம் என்றால் என்ன தெரியுமா? மனிதத் தன்மையுடன் நடந்துகொள்வதுதான் நாம் கடவுளுக்கு அருகாமையில் இருக்கின்றோம் என்பதன் பொருள். ஒருவன் கடவுளை நோக்கிச் செல்லும் பாதையில் முன்னேற்றம் அடைந்துள்ளான் என்பதற்கான உண்மையான அறிகுறி, அவன் அந்த அளவிற்கு நல்லவனாகவும், எல்லா ஜீவன்களிடத்தும் அன்புள்ளவனாகவும், பணிவு உடையவனாகவும், உண்மையில் நிற்பவனாகவும், எல்லோருக்கும் சேவை செய்பவனாகவும் இருப்பதே ஆகும். சுருங்கச் சொன்னால், அவனுடைய நடை, உடை, பாவனை, வாழ்க்கைமுறை எல்லாமே FINE ஆகிவிடும். கடவுள் விரிந்து பரந்தவர். அவரை நாம் அடைய வேண்டும் என்றால், நாமும் பரந்து விரிந்த இதயம் உடையவர்களாக இருக்க வேண்டும். பொறாமை, கோபம், சுயநலம், தற்பெருமை, கர்வம் என்று ஒரு குறுகிய வட்டத்திற்குள் நாம் இருக்கும்வரை, பரந்து விரிந்த அந்தப் பரம்பொருளை நாம் அடையவே முடியாது. புரிந்ததா?

பக்தர் – நன்றாகப் புரிந்தது ஸ்வாமிஜி. அந்தப் பரந்து விரிந்த மனப்பாங்கை அடைய எங்களால் பின்பற்ற முடிந்த ஒரு எளிய வழியை தாங்கள்தான் காண்பித்தருள வேண்டும்.

ஸ்ரீ ஸ்வாமிஜி – நாம் தினமும் இறை நாமம் சொல்லி பிரார்த்தனை செய்கின்றோம் அல்லவா? முதலில் உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்திற்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள். அதைத்தாண்டி உங்கள் அண்டை வீட்டாரும், உங்கள் தெருவில் உள்ளவர்களும் நன்றாக இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்யுங்கள். உங்கள் ஊரும், நாடும், உலகமுமே வளமுடன் இருக்கவேண்டும் என்று இறைவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள். இவற்றையெல்லாம் தாண்டி, நீங்கள் யாரையெல்லாம் விரோதி என்று நினைக்கின்றீர்களோ, அவர்கள் நலனுக்காகவும் உளமாற இறைவனை பிரார்த்தனை செய்யுங்கள். நாம் வெறுக்கும் ஒருவருக்கு ஒரு மிக விலை உயர்ந்த பொருளைக்கூட கொடுத்துவிட முடியும். ஆனால், உண்மையில் அவருக்கும் நல்லது நடக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்யவது மிகவும் கடினம். உண்மையில் அப்படி நினைத்தால்தான் அத்தகைய பிரார்த்தனை நம் மனதில் எழும். எல்லோரும் நலமாக இருக்க எப்பொழுதும் பிரார்த்திப்போம்.

**தெய்வம் வாழும் வீட்டின் - அதாவது முக்தியின் வாசல்படி மிகவும் தாழ்ந்து உள்ளது (உயரம் மிகவும் குறைவு) அதனால் யார் மிகவும் பணிவுடன் எப்பொழுதும் நடக்கின்றார்களோ அவர்களே அதை அடையமுடியும்.**

**- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி**

## அறிவிப்பு

**மதுரமுரளி மாத இதழ் சந்தா அனுப்ப வேண்டிய முகவரி:**

GURUJI SRI MURALIDHARA SWAMIGAL MISSION
No 4/11, Plot No 11, Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83
DD in name of 'Guruji Sri Muralidhara Swamigal Mission'

**நேரில் ரொக்கம் மணியார்டர் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்**

**ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

Email: helpdesk@madhuramurali.org , Ph: +9144-24895875

----------------------------------------------------------------

**ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி:**

Dr A BHAGYANATHAN,
Personal Secretary To
HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No11, Door No 4/11, Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org

## பதிப்புரிமை


- **Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission**


- **Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.**
- **Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.**
- **Advertisements in Madhuramurali are invited.**

# Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



## Gururam Consulting Private Ltd

Registered with
The Registrar of Newspapers for India
R.No 62828/1995
Regd. No. TN/CC(S)DN/119/18-20

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th - 10th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP—608/18-20




Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar